## சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. டார்ச் விளக்கில் எதிரொளிப்பானாகப் பயன்படுவது.........

அ) குழியாடி ஆ) குவியாடி இ) சமதள ஆடி

2.ஒளி ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்குச் செல்லும் போது எந்த படு கோணத்தில் ஒளிவிலகம் அடையாது?

அ)0 ஆ)45° இ)90°

3. ஒளியின் திசைவேகம்..............ல் பெருமமாக உள்ளது.

அ) வெற்றிடத்தில் ஆ) கண்ணாடியில் இ) வைரத்தில்

4. பெரிதான மாய பிம்பங்களை உருவாக்குவது..........

அ) குழியாடி ஆ) குவியாடி இ)சமதள ஆடி

5. முப்பட்டகம் ஒன்றின் வழியே ஒளிக்கற்றை பாயும்போது, அது,

அ) எதிரொளிக்கப்படுகிறது.

ஆ) விலகலடைகிறது மற்றும் நிறப்பிரிகை அடைகிறது.

இ) விளக்கல் மட்டும் அடைகிறது.

6. எதிரொளிக்கும் பகுதி வெளிப்புறமாக வளைந்திருப்பின்அது

அ) குழியாடி ஆ) குவியாடி இ)சமதள ஆடி

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

7. சூரிய அடுப்புகளில் சூரிய ஒளியைக் குவித்து வெப்பம் உண்டாக்கப் பயன்படும் பெரிய ஆடிகள்

8. 5 செ.மீ குவியத்தொலைவு கொண்ட குழியாடியின் வளைவு ஆரம்

9. தெரு விளக்குகளில் (Street light)பயன்படும் ஆடி

10. முப்பட்டகம் ஒன்றில் ஏற்படும் விலக்கு கோணம் கோணத்தைப் பொருத்தது

LIVEWORKSHEETS

## ***சரியா? தவறா?***

11. குவியாடி எப்போதும் சிறிதாக்கப்பட்ட, நேரான, மாய பிம்பத்தை உருவாக்கும்.

12.ஓர் ஒளிக்கதிர் ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்குச் செல்லும்போது, விலக்கல் அடைவதில்லை.

13. வைரங்கள் மின்னுவதற்குக் காரணம் ஒளியின் முழு அக எதிரொளிப்பே.

14.குழியாடி ஒன்றின் வளைவு மையத்தில் பொருள் வைக்கப்படும்போது நேரான மாய பிம்பம் உருவாகும்.

15. ஒளிவிலகல் கோணம் ஒளிவிலகல் எண்ணைப் பொருத்தது

## ***பொருத்துக***

| | |
|---|---|
| 16. மலைகளில் காணப்படும் மிகக் குறுகிய வளைவுகளில் பயன்படுவது | ஆ) முழு அக எதிரொளிப்பு |
| 17ஒளிவிலகல் எண் . | அ)மாறிலி |
| 18. கானல் நீர் | ஈ)குழியாடி |
| 19. தண்ணீருக்குள் உள்ள நாணயம் சற்று மேலே உள்ள போல் தெரிவது | இ) ஒளிவிலகல் |
| 20. பல் மருத்துவர் பயன்படுத்துவது | ஈ)குவியாடி |

மு.மணிகண்டன்(ப.ஆ),அ.உ.நி.பள்ளி,
அயன்தத்தனூர்,செந்துறை,அரியலூர்

LIVEWORKSHEETS